05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சிலப்பதிகாரக் காப்பிய நாயகன் கோவலன் காட்டும் ஊழ் ஓர் ஆய்வு

# A STUDY ON DESTINY OF KOVALAN THE MAIN CHARACTER IN SILAPPATHIKAARAM EPIC

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ரூப்பனா தரிசினி இராமச்சந்திரன்
ROOPNA DARSHENE RAMACHANDRAM

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சிலப்பதிகாரக் காப்பிய நாயகன் கோவலன் காட்டும் ஊழ் ஓர் ஆய்வு

A STUDY ON DESTINY OF KOVALAN THE MAIN CHARACTER IN SILAPPATHIKAARAM EPIC

ரூப்பனா தரிசினி இராமச்சந்திரன்
ROOPNA DARSHENE RAMACHANDRAM

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISSERTATION PRESENTED TO QUALIFY FOR A MASTER’S DEGREE IN ARTS
(RESEARCH MODE)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

Please tick (√)
- Project Paper [ ]
- Masters by Research [√]
- Master by Mixed Mode [ ]
- PhD [ ]

## INSTITUTE OF GRADUATE STUDIES

## DECLARATION OF ORIGINAL WORK

This declaration is made on the ......13th......day of......August...20..21..

### i. Student's Declaration:

I, **Roopna Darshene D/O Ramachandram, M20142002346, Faculty of Language & Communication** (PLEASE INDICATE STUDENT'S NAME, MATRIC NO. AND FACULTY) hereby declare that the work entitled **A Study of Destiny of Kovalan The Main Character in Silappathikaaram Epic** is my original work. I have not copied from any other students' work or from any other sources except where due reference or acknowledgement is made explicitly in the text, nor has any part been written for me by another person.

Signature of the student

### ii. Supervisor's Declaration:

I **Dr. Franklin Thambi Jose Selistus Darling** (SUPERVISOR'S NAME) hereby certifies that the work entitled **A Study of Destiny of Kovalan The Main Character in Silappathikaaram Epic** (TITLE) was prepared by the above named student, and was submitted to the Institute of Graduate Studies as a * partial/full fulfillment for the conferment of **Master of Arts** (PLEASE INDICATE THE DEGREE), and the aforementioned work, to the best of my knowledge, is the said student's work.

29/04/2022

Date

Signature of the Supervisor

UPSI/IPS-3/BO 31
Pind.: 01 m/s:1/1

INSTITUT PENGAJIAN SISWAZAH /
*INSTITUTE OF GRADUATE STUDIES*

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: A Study of Destiny of Kovalan The Main Character in Silappathikaaram Epic

No. Matrik /*Matric's No.*: M20142002346

Saya / *I*: Roopna Darshene D/O Ramachandran

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*
4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| ☐ | SULIT/*CONFIDENTIAL* | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | TERHAD/*RESTRICTED* | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.* |
| ☑ | TIDAK TERHAD / *OPEN ACCESS* | |

(Tandatangan Pelajar/ Signature)

Tarikh: 29/06/2022

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

DR FRANKLIN THAMBI JOSE S (PhD)
PENSYARAH KANAN
FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
PERAK, MALAYSIA

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT** @ **TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# நன்றியுரை

பெற்ற தாயிக்கு வணக்கம்; கற்ற தமிழுக்கு வணக்கம். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனின் திருவருளால் இவ்வாய்வினை வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்டேன். ஆகவே, என் முதல் நன்றியினை இயற்கை உண்மை வடிவினனான இறைவனுக்குச் செலுத்துகிறேன். மேலும், இவ்வாய்வினைச் சிறப்பாகச் செய்து முடிக்க உறுதுணையாகவும் முறையான வழிகாட்டலையும் வழங்கிய சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் திமிழ்த்துறைப் பிரிவின் விரிவுரையாளரான டாக்டர் பிராங்கலின் தம்பி ஜோஷ் எஸ் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, எனது ஆய்வினை மறுசீராய்வு செய்து வழிகாட்டிய டாக்டர் சாமிக்கண்ணு ஜபமணி இஷாக் சாமுவேல் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து, இவ்வாய்வினை முடிப்பதற்கு எனக்கு மிகுந்த ஊக்குவிப்புத் தந்து, பண உதவியும் பொருளுதவியும் வழங்கிய என் கணவருக்கும் பெற்றோர்களுக்கும் உடன்பிறப்புகளுக்கும் நன்றி மாலையைப் பணிவுடன் சூட்டுகிறேன். மேலும், இவ்வாய்வினை நான் சிறப்புடன் செய்து முடிக்க எனக்கு அனைத்து வகையிலும் உதவி கரம் நீட்டிய என் நண்பர்களுக்கும் நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன். இவ்வாய்வினை நல்முறையில் முடிக்க உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் நன்றி சமர்ப்பணம் ஆகுக.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச் சாரம்

இவ்வாய்வின் நோக்கம் சிலப்பதிகாரத்தில் கோவலனின் தீவினைகளையும் நல்வினைகளையும் அடையாளங்கண்டு, அவ்வினைகளைத் திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டுடன் பகுப்பாய்வதுடன் அவ்வூழ்வினைச் சமுதாயத்திற்குப் புகட்டும் படிப்பினைகளை விளக்குவதாகும். வலிமையான ஊழ்வினையால் விளையும் பலனை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் முதன்மை ஏடலாகும். தரவாரி ஆய்வு அணுகுமுறை இவ்வாய்வின் கேள்விகளுக்கு விடைக்காண பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூன்று நோக்கங்களையும் அடைவதற்கு, இவ்வணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது, நூலக மற்றும் உரைப்பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தியுள்ளது. சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதும் படிக்கப்பட்டுக் கோவலனின் தீவினைகளும் நல்வினைகளும் அடையாளங்கண்டு, அவனது ஊழ்வினை திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டினைக் கொண்டு பகுப்பாயப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் கோவலனது ஊழ்வினையை வடிவமைக்கும் நான்கு தீவினைகளும் நான்கு நல்வினைகளும் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளன. திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டினைக் கொண்டு கண்டறியப்பட்ட நான்கு தீவினைகளுக்கும் நல்வினைகளுக்கும் ஏற்ற ஊழ்வினைப்பயன்கள் பகுப்பாயப்பட்டுள்ளன. தொடர்ந்து, கோவலனின் ஊழ்வினை சமுதாயத்திற்குப் புகட்டும் ஒன்பது படிப்பினைகளும் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் கண்டறிவுகள், ஆற்றும் வினைகளுக்கேற்ற ஊழ்வினைப்பயனை ஒவ்வொரு மனிதரும் எதிர்கொண்டே ஆக வேண்டும் எனத் தெளிவுபடுத்துகின்றது. ஊழ்வினையின் பயன்பாடும் புரிதலும் மனிதனின் ஆத்ம கட்டினைத் துறக்கவும் மெய்யியல் அறிவை வளர்க்கவும் தனக்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நன்மை பயக்கும் வகையில் அறச் செயல்களைச் செய்யவும் தூண்டும் என்பதனை உணர்த்துகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# A STUDY ON DESTINY OF KOVALAN THE MAIN CHARACTER IN SILAPPATHIKAARAM EPIC

## ABSTRACT

The objective of this study is to identify vices and virtues of Kovalan in the Tamil epic Silappathikaaram, to analyse those attributes with reference to Thiruvalluvar's *Oozh (loosely translated as destiny)* theory and to further expound on the lesson learned through Kovalan's destiny. The main aim of this study is to convey the outcome of an intense *Oozh*. Qualitative data analysis methods have been used in this research whereby all the three objectives of this study have been reached effectively through library and text analysis methods. In the theory part, the whole of Silappathikaaram epic has been thoroughly studied and understood. Kovalan's vices and virtues were identified by scrutinizing his lifestyles, his journey, incidences that influence his next course of action and its impact on the society has been analyzed in accordance with Thiruvalluvar's *Oozh* theory. Four vices and four virtues that shape Kovalan's destiny in Silappathikaaram were explored. The effects of predestination were analyzed according to the four evils and virtues as propounded by Thiruvalluvar in his couplets. As for the findings, nine lessons learned from Kovalan's destiny were explained through critical observation of all the incidents that shaped his life. It clearly reveals that Kovalan's four vices and four virtues had dictated his destiny and corroborates the fact that human race are destined to experience the consequences of their own act. The implication of this study is, it proves one can't refute the law of nature. Our own actions produce results according to the pattern of those actions. The research is significant in a sense that Kovalan's life story is relevant even today and can be used as a guiding principle in our daily conduct. In conclusion, understanding Thiruvalluvar's *Oozh* theory with reference to Silappathikaaram helps one to understand the implication of one's vices and virtues. Enhancing oneself and family with knowledge and conduct based on virtues will benefit the society on the whole.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# KAJIAN HUKUM KARMA KOVALAN WATAK UTAMA EPIK SILAPPATHIKAARAM

## ABSTRAK

Objektif kajian ini adalah untuk mengenal pasti perilaku buruk dan perilaku baik Kovalan dalam epik Tamil Silappathikaaram, menganalisis ciri-ciri tersebut berdasarkan teori *Oozh* (diterjemahkan secara longgar sebagai karma) Thiruvalluvar dan selanjutnya untuk menjelaskan pengajaran yang diperoleh daripada cara hidup Kovalan. Tujuan utama kajian ini adalah untuk menekankan akibat *Oozh* yang sengit. Kaedah analisis kualitatif telah digunakan dalam penyelidikan ini. Objektif kajian ini telah dicapai secara berkesan melalui kaedah analisis perpustakaan dan teks. Perilaku buruk dan baik Kovalan diidentifikasi dengan meneliti corak perjalanan hidup, tingkah laku yang mempengaruhi tindakan lanjut Kovalan dan kesannya terhadap masyarakat. Semuanya telah dianalisis berpandukan teori *Oozh* Thiruvalluvar. Dapatan kajian menunjukkan bahawa sembilan pengajaran yang diperoleh daripada kehidupan Kovalan dijelaskan melalui pengamatan kritis terhadap semua kejadian yang berlaku dalam hidupnya. Ternyata, empat perilaku buruk dan empat perilaku baik Kovalan mencorakkan peristiwa hidupnya dan membuktikan kesahihan fakta yang menyatakan bahawa golongan manusia ditakdirkan untuk menanggung akibat perbuatan mereka sendiri tanpa mengambil kira latar belakang seseorang. Kesimpulannya, memahami teori *Oozh* Thiruvalluvar dengan merujuk kepada Silappathikaaram dapat membantu kita memahami dan mendalami implikasi peri laku buruk dan baik dalam kehidupan seharian kita. Implikasi kajian ini menunjukkan bahawa manusia akhirnya tidak boleh menafikan hukum alam dan akibat perbuatan mereka. Corak tindakan seseorang menentukan hasil yang diterima. Kajian ini adalah penting memandangkan kisah hidup Kovalan relevan hingga hari ini dan boleh dijadikan sebagai prinsip hidup atau panduan dalam kehidupan seharian kita Oleh hal yang demikian, pengetahuan tentang nilai-nilai peril aku baik amatlah penting untuk meningkatkan diri dan keluarga dan memberi manfaat kepada masyarakat pada keseluruhannya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **DECLARATION OF ORIGINAL WORK** | | | ii |
| **DECLARATION OF DISSERTATION** | | | iii |
| **நன்றியுரை** | | | iv |
| **ஆய்வுச் சாரம்** | | | **v** |
| **ABSTRACT** | | | vi |
| **ABSTRAK** | | | vii |
| **பொருளடக்கம்** | | | viii |
| **அட்டவணைப் பட்டியல்** | | | xv |
| **வரைபடப் பட்டியல்** | | | xvi |
| **இயல் 1** | **அறிமுகம்** | | |
| | 1.1 | முன்னுரை | 1 |
| | 1.2 | ஆய்வுப் பின்னணி | 2 |
| | 1.3 | ஆய்வுச் சிக்கல் | 10 |
| | 1.4 | ஆய்வு நோக்கம் | 18 |
| | 1.5 | ஆய்வு வினா | 20 |
| | 1.6 | ஆய்வு நன்மைகள் | 21 |
| | 1.7 | ஆய்வு எல்லை | 25 |
| | 1.8 | ஆய்வு ஆதாரங்கள் | 27 |
| | 1.9 | கலைச்சொல் விளக்கம் | 28 |
| | | 1.9.1 சிலப்பதிகாரம் | 28 |
| | | 1.9.1.1 புகார்க்காண்டம் | 29 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.9.1.2 மதுரைக் காண்டம் 31

1.9.1.3 வஞ்சிக் காண்டம் 37

1.9.2 கோவலன் 40

1.9.3 திருக்குறள் 42

1.9.4 ஊழ்வினை 43

1.10 தொகுப்புரை 46

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 48

2.2 முனைவர்ப்பட்ட ஆய்வுகள் 50

2.3 முதுகலைப்பட்ட ஆய்வுகள் 76

2.4 ஆய்வுக் கட்டுரைகள் 78

2.5 இணையக் கட்டுரைகள் 89

2.6 தொகுப்புரை 95

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 98

3.2 ஆய்வு வடிவமைப்பு 99

3.2.1 ஆய்வு வடிவம் 102

3.2.2 நூலக ஆய்வு முறை 103

3.3 தரவுகள் சேகரிக்கும் முறை 105

3.4 ஆய்வுக் கோட்பாடு 107

3.5 ஊழ்க்கோட்பாடு (அதிகாரம் 38) 108

3.5.1 முயற்சியும் சோம்பலும் 109


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.5.2 அறிவும் பேதமையும் 111

3.5.3 உண்மை அறிவும் நூலறிவும் 112

3.5.4 தீயவையும் நல்லவையும் 114

3.5.5 வேண்டாதவையும் வேண்டியவையும் 115

3.5.6 அனுபவித்தலும் இழத்தலும் 117

3.5.7 இன்பமும் துன்பமும் 118

3.5.8 ஊழின் வலிமை 119

3.6 ஊழ்க்கோட்பாட்டுக் கூறுகள் 121

3.7 கோட்பாட்டு உட்கூறுகள் 123

3.7.1 ஊழ்க்கோட்பாட்டின் உட்கூறுகள் 123

3.8 தொகுப்புரை 125

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இயல் 4 ஆய்வுக் கண்டறிவுகளும் பகுப்பாய்வுகளும்**

4.1 முன்னுரை 127

4.2 சிலப்பதிகாரத்தில் கோவலனின் தீவினைகளும் நல்வினைகளும் 128

4.2.1 அறிமுகம் 129

4.2.2 கோவலனின் தீவினைகளும் நல்வினைகளும் 130

4.2.3 கோவலனின் தீவினைகள் 134

4.2.3.1 பொய்யுரைத்தல் 136

4.2.3.2 அரசனின் செங்கோல் வீழ காரணமாகுதல் 137

4.2.3.3 சங்கமன் கொலையுண்டதற்குக் காரணமாகுதல் 138

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| | 4.2.3.4 நீலி கணவனைப் பிரிந்து துயருறக் காரணமாகுதல் | 139 |
| | 4.2.4 கோவலனின் நல்வினைகள் | 142 |
| | 4.2.4.1 சாபம் விலக வேண்டல் | 142 |
| | 4.2.4.2 மறையவனைக் காத்த கோவலன் | 145 |
| | 4.2.4.3 பாவம் போக்கும் பயனை வாங்கி பிரிந்த தம்பதியரைச் சேர்த்து வைத்தல் | 147 |
| | 4.2.4.4 தன்னலம் கருதாத வீரன் | 150 |
| | 4.2.5 தொகுப்புரை | 152 |
| 4.3 | சிலப்பதிகாரத்தில் கோவலனின் செயலுக்கான ஊழ்வினைப் பயனைத் திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாட்டினைக் கொண்டு பகுப்பாய்தல் | 153 |
| | 4.3.1 கோவலனின் தீவினைக்கான போகூழ் | 155 |
| | 4.3.1.1 பொய்யுரைத்தல் | 156 |
| | 4.3.1.2 அரசனின் செங்கோல் வீழ காரணமாகுதல் | 181 |
| | 4.3.1.3 சங்கமன் கொலையுண்டதற்குக் காரணமாகுதல் | 194 |
| | 4.3.1.4 நீலி கணவனைப் பிரிந்து துயருறக் காரணமாகுதல் | 209 |
| | 4.3.2 கோவலனின் நல்வினைக்கான ஆகூழ் | 230 |
| | 4.3.3 தொகுப்புரை | 246 |
| 4.4 | கோவலனின் ஊழ்வினை புகட்டும் படிப்பினைகள் | 247 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.4.1 ஊழ்வினைக் காட்டும் உய்வினை 248

4.4.2 வினையும் பிறவியும் 253

4.4.3 வினைக்கு ஏற்ற பலனையே அனுபவித்தல் 257

4.4.4 பொய்ச்சான்றுக் கூறாமை 259

4.4.5 கொல்லாமை 263

4.4.6 நிலையாமை 266

4.4.7 ஒழுக்கம் பேண வேண்டும் 269

4.4.8 எண்ணித் துணிக கர்மம் 276

4.4.9 தக்க காலமும் தகுந்த செயலும் 279

4.4.10 தொகுப்புரை 284

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 286

5.2 ஆய்வுக் கண்டறிவுகளும் கலந்துரையாடலும் 287

5.2.1 கலந்துரையாடல் 288

5.3 தொடராய்வுக்கான பரிந்துரைகள் 303

5.4 தொகுப்புரை 304

**துணைநூற்பட்டியல்** 306


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 3.1 | ஊழ்க்கோட்பாட்டு உட்கூறுகள் | 124 |
| 4.1 | கோவலனின் தீவினைகளும் நல்வினைகளும் | 131 |
| 4.2 | கோவலனின் தீவினைக்கான போகூழ் | 156 |
| 4.3 | கோவலனின் நல்வினைக்கான ஆகூழ் | 230 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## வரைப்படப் பட்டியல்

**வரைப்பட எண்** **பக்கம்**


3.1 ஆய்வு வடிவம் 102

3.2 ஊழ்க்கோட்பாடு கூறுகள் 122


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. சிலம்பின் காரணமாகக் கொண்ட வரலாற்றைக் கூறுவதால் இக்காப்பியம் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. சிலப்பதிகாரத்தில் மிக முக்கியக் கதைமாந்தன் கோவலன். இவ்வாய்வானது கோவலனின் ஊழ்வினையைத் திருவள்ளுவரின் ஊழ் கோட்பாட்டினைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் முதல் இயலான அறிமுக இயலில் தலைப்பினை விவரிக்கக் கூடிய அங்கமாக அமைகிறது. இவ்வியலில் ஆய்வின் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள் மற்றும் முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் இந்திய நாடு முழுவதையும் தொடர்பு கொள்ளும் அரிய காப்பியமாகும். இக்காப்பியத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களான மூவேந்தர்களைப் பற்றிய செய்திகளோடு கொங்கர், மாளுவவேந்தர் கலிங்கர் முதலானோர் மற்றும் மன்னர்களான நூற்றுவர் கன்னர், கனக விசயர் ஆகியவர்களைப் பற்றிய செய்திகளும் கொணர்ந்த காப்பியம். இக்காப்பியம் சமயக் கருத்துகள் யாவும் ஒன்றை ஒன்று ஏத்திப் போற்றும் வகையில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரம் சமணத் துறவியான கவுந்தியடிகளின் பெருமையும், திருமால் வழிபாடாகிய ஆய்ச்சியர் குரவையும், கொற்றவை வழிபாடு புரியும் வேட்டுவ வரியும், பின்பு வேடுவர் சாற்றும் குன்றக் குரவையும் கொண்ட தமிழர் சமயங்களை ஒன்றிணைக்கும் காப்பியமாகத் திகழ்கின்றது.

இவ்வாய்வானது சிலம்பின் பாத்திரமான கோவலனின் ஊழ்வினையை ஆராயவிருக்கின்றது. ஒரு பிறவியில் செய்த நன்மைகளும் தீமைகளும் அடுத்த பிறவியில் செய்தவனை வந்து அடைந்தே தீரும் என்ற கருத்து 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' எனச் சிலப்பதிகாரத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. தீதும் நன்றும் பிறர் தர வாரா. ஊழ்வினை என்பது முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினையைக் குறிக்கின்றது. ஒவ்வொருவரும் முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினைகளின் பலனை இப்பிறப்பிலேயே அனுபவித்துத்தான் தீர வேண்டும். இது தமிழர்களின் பழங்காலக் கொள்கையாகும். கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் ஊழ்வினைத்தான்; கோவலனைக் கொல்லும்படி பாண்டிய நெடுஞ்செழியன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கூறியதற்குக் காரணம் ஊழ்வினைத்தான். இவ்வாறு சிலப்பதிகார காதையே ஊழ்வினையை அடிப்படையாகக் கொண்டுதான் இயம்பிருப்பதாக இளங்கோவடிகள் எழுதுகிறார். அது உருக்கொண்டு வந்து தன் பயனை ஊட்டியே தீரும் என்பது சமணர் கொள்கை. இக்கொள்கையை மக்கள் மனத்தில் ஊன்றச் செய்வதற்கே சிலப்பதிகாரம் எழுதப்பட்டது என்பதை அதன் பதிகத்திலே காணலாம். இதனை,

**"அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று ஆவதூஉம்,**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துதலும்,**
**ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும் என்பதுஉம்**
**சூழ்வினைச் சிலம்பு காரணம் ஆக**
**சிலப்பதி காரம் என்னும் பெயரால்**
**நாட்டதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்" என**
**"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது**
**அடிகள் நீரே அருளுக!" என்றாற்கு**

**(சிலப்-பதிகம் 62)**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதன் வழி சிலப்பதிகாரம், முப்பெரும் உண்மைகளை உணர்த்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவு. அவை

- அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்.
- உறைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
- ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

சிலப்பதிகாரம் பல இடங்களில் ஊழ்வினை வலியுறுத்துகின்றது. ஊழ்வினை காரணமாக நடந்த பல நிகழ்ச்சிகள் சிலம்பில் குறிக்கப்பட்டுள்ளன. மனிதனின் வாழ்க்கை இறைவன் அருளிய வரமாகும். மண், மனை, வாழ்க்கை துணை, குரு, நோய், இவைகளெல்லாம் ஒருவனின் கர்ம வினைகளுக்கு ஏற்பவே அமையும் என்று சாத்திரம் கூறுகிறது (சுலோட்சனா. ப, 1999). இப்பிறப்பில் நாம் நல்லது செய்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நல்லவராகவே வாழ்ந்தாலும் முற்பிறவி கர்ம வினைகளுக்கு ஏற்ப அதன் பலன்களை அனுபவித்தே தீர வேண்டும் என்பதனைச் சிலப்பதிகாரத்தை நன்கு அணுகினால் புலப்படும் (சுலோட்சனா. ப, 1999). ஒருவன் செய்யும் செயல் நல்ல செயலாக இருந்தால் அதன் பயனாய் நன்மையும், தீயச் செயலைச் செய்தால் அதன் பயனாய் தீமையும் விளையும். இந்த வினை விளையும் காலம் அதவாது பயன் அளிக்கும் காலம் மனிதனுடைய நிகழ்க்காலத்திலோ, மறுபிறவியிலோ நிகழும். இக்கருத்தைப் பெரும்பாலான சமயங்கள் ஏற்றுக் கொள்கின்றன. இந்த நிகழ்வின் சுழற்சியைக் ‘கர்மா’ என வடமொழியாளர்களால் வழங்கப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் ஊழ்வினை என்று கூறுகின்றன. இந்த நிகழ்வு மனிதனது செயலின் அடிப்படையில் நிகழ்வதால் செயல் கோட்பாடு என்றும் கூறுவர். சமயங்கள் வினைக்கோட்பாடு என்றும் விதிக் கோட்பாடு என்றும் அழைக்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, இவ்வாய்வில் தமிழ் நீதி இலக்கியமெனவும் உலகப் பொது மறையெனவும் விளங்குகின்ற திருக்குறளின் அறத்துப்பால் இயலில் காணப்படும் ஊழ் அதிகாரம் ஆய்வின் கோட்பாடாக எடுத்தாளப்பட்டுள்ளது. நெறியான வாழ்வியலையும் வாழ்வதற்கான தத்துவங்களையும் கூறுகின்ற சிலப்பதிகாரம் ஆய்வுக் களமாக அமைகின்றது. இவ்விரண்டு இலக்கியங்களும் தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையின் உச்சமாகத் திகழ்கின்றன. திருக்குறளும் சிலப்பதிகாரமும் பகர்கின்ற கருத்துகள் அனைத்தும் மனித குலத்தின் வாழ்வியலைச் சீர்படுத்தும்.

**‘எல்லாப் பொருளும் இதன்பால் உள**
**இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்’**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்று திருக்குறளைச் சிறப்பிக்கின்றது திருவள்ளுவ மாலை (பத்மதேவன், 2010). மனித சமுதாயத்தை ஆழ்ந்து அணுகி அச்சமுதாயம் ஒரு கட்டமைப்பில் நெறியோடு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பெற்ற நூல் திருக்குறள் என (சொக்கலிங்கம், 2014) இயம்புகின்றார். தொடர்ந்து, (சொக்கலிங்கம், 2014) தமிழுக்கு அறநூல்களின் தோற்றம் திருக்குறளில் தான் அமைந்துள்ளதாகக் காட்டுகிறார்.

தொடர்ந்து, திருக்குறளை முதன்மையாகக் கொண்டு நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை போன்ற பதினொரு நூல்கள் அறம் காட்டும் நூல்களாகப் பதினென் கீழ்க்கணக்கில் இடம் பெறுகின்றன. இவை வாழ்க்கையின் வழிகாட்டிகளாகவும் அறத்தைப் போதிக்கும் நூல்களாகவும் திகழ்கின்றன. மேலும், தனிமனிதன் ஒருவன் வாழ்க்கையில் ஊழ்வினையின் செயற்பாட்டினைத் தெளிவாகவும் ஆழமாகவும் இரண்டே அடிகள் கொண்டு விளக்கியுள்ளார்.

திருக்குளின் மாண்பை மேலும் விளக்கும் வண்ணம் இவ்வாய்வானது அறம் உரைப்பாயிரத்தில் ஊழியல் அதிகாரத்தில் அமைந்துள்ள ஊழ்க்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. ‘ஊழிற் பெருவலி யாவுள’ என்பதை வள்ளுவர் உறுதியாகப் பகர்கின்றார். ஊழ் நம் வாழ்வில் செலுத்தும் அதிகாரத்தை யாராலும் மாற்ற இயலாது என்ற கருத்தை விளக்கி ஊழ் என்ற தலைப்பிலேயே முப்பத்தெட்டாம் அதிகாரத்தை எழுதுகிறார் வள்ளுவர். ஊழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் செல்வம், முயற்சி, அறிவு, நன்மை, தீமை, நிலையாமை, துறவு, ஊழின் வலிமை என்ற கருத்துகளாய் ஊழுடன் தொடர்புப்படுத்திக் கூறுகிறார். ஊழானது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அது முதிர்கின்ற காலம் வரை ஒருவனுடன் இருந்து முதிர்ந்தவுடன் அதன் பயனைக் கொடுக்கும்.

இதனைச் சார்ந்தே உலகில் உருவான பல சமயங்கள் கர்மப்பலன் நம்பிக்கையை ஏற்கின்றன. இதனையே சமய ஒருமைப்பாட்டியம் என உலக இறை ஞானத்தை 'theosophy' என்கின்றனர். (Jerome A. Anderson, 1896). ஊழ்வினை தனது தாக்கத்தைக் காத்திருத்து ஒருவரின் வினைக்கேற்ப ஏறி அதன் விளைவைத் தரும் (Jerome A. Anderson, 1896). ஆக, தமிழ் இலக்கியத்தில் திருக்குறளும் சிலப்பதிகாரமும் காலத்திற்கு ஏற்ற வகையில் தன்னைப் புதுப்பித்துச் சமுதாய வளர்ச்சிக்கு நல்லதொரு சிந்தனையை வழங்கவல்லது. இதன் அடிப்படையில் ஆய்வாளர் திருவள்ளுவரின் ஊழியல் கோட்பாட்டினைச் சிலம்பின் தலைவனான கோவலனின் வாழ்வியல் ஊடே பொருத்திப் பகுத்தாயவிருக்கின்றார். இவ்வாய்வில் கோவலனின் ஆகூழுக்கான நல்வினைகளையும் போகூழுக்கான தீவினைகளையும் கண்டறிந்து விளக்கப்பட்டுள்ளன. கோவலனின் ஊழ்வினைத் தாக்கமானது மனித குலத்திற்குப் பாடமாகும். கோவலனின் ஊழ்வினை சமுதாயத்திற்குப் புகட்டும் படிப்பினைகளையும் இவ்வாய்வு எடுத்துரைக்கும்.

### 1.3 ஆய்வுச் சிக்கல்

ஊழ்வினை மனித வாழ்வின் நெறிமுறைக்கு வழிவகுக்கும் எனலாம். மனிதனானவன் தீவினைகளைச் சிந்திப்பதையோ அல்லது செய்வதைத் தவிர்த்தான் என்றால் உலகில் அன்பும் அமைதியும் நிலவும். அக்காலத் தமிழர்கள் அற வழியில் செல்வதையே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ்வின் கோட்பாடாகக் கொண்டனர். அது போல ஊழ்வினையின் எல்லை நம் வாழ்வினை எவ்வாறெல்லாம் வடிவமைத்து நமக்குப் பாடம் கற்றுத் தரும் என்பதனைக் கோவலனைக் காட்டாக வைத்து அறத்துப்பாலில் திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டினை இவ்வாய்வு எடுத்துரைக்கும். வினை என்பது நல்வினை தீவினை என அமைக்கப்பட்டுள்ளது. இவை மனிதனின் முற்பிறப்பின் செயல்களை வைத்தே பிறவி பலன்களை அளிக்கிறது. இவ்வூழ்வினையானது சிலம்பின் தலைவனான கோவலனை வந்தடைந்து தந்த பலனைத் திருவள்ளுவரின் முற்போக்கான ஊழ்விதியின் வழி ஆராயப்படுவதே ஆய்வின் சிக்கலாக எடுத்தாளப்பட்டுள்ளது.

இளங்கோவடிகள் சமணத் துறவியாவார். சமணக்காப்பியங்கள் அனைத்தும் ஊழ்வினை என்ற சொல்லுக்கு முற்பிறவி வினை என்ற அடிப்படையிலேயே பொருள் கூறுகின்றன. ஒருவன் முற்பிறவியில் செய்த வினையின் அடிப்படையிலேயே அவனது அடுத்த பிறவியின் செயல்பாடுகள் அமையும் என்பதை அவை விளக்குகின்றன. ஒருவன் நிகழ்கால வாழ்வின் முற்பகுதியில் செய்த வினையின் பயனை அதே வாழ்வின் பிற்பகுதியில் பெறுவான் என்ற கருத்தையும் காப்பியங்களில் காணமுடிகின்றது.

சிலப்பதிகாரம் சமணச் சமயம் சார்ந்த காப்பியமாக இருந்தாலும், சமயம் சாரா உலகப் பொதுமறையின் ஊழ் கோட்பாட்டினை ஆய்வாளர் தெரிவு செய்து உள்ளார். திருக்குறள் சமயச் சார்பற்றது என்றும் உலகப் பொதுமறை என்றும் பரவலாகப் பேசப்படுகின்றது. மனிதனிடத்தில் தீவினை மேலோங்கி இருக்குமேயானால் அதன் காரணமாகச் சோம்பல் ஏற்பட்டுப் பொருளைத் தேடும் முயற்சியைக் கைவிடுவான். அதன் விளைவால் வறுமையுறுவான் என்ற கருத்து உடையவராக வள்ளுவர் இருந்துள்ளார். அப்படிப்பட்ட தீவினையைச் செய்யாது நல்வினை செய்து நலமாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ வேண்டும் என்ற கருத்தும் வள்ளுவர் காலத்தில் இருந்திருக்கின்றது. இக்காலக் கட்டத்தில் மனிதன் தன் செயல்களை விருப்பம் போல், மேற்கொண்டு, நல்ல சிந்தனை இன்றி, முறையான பேச்சுகள் இன்றி, நல்ல செயல்களின்றி இருப்பதனைக் காணமுடிகின்றது. இஃது ஆய்வின் சிக்கலாகக் கருதப்படுகின்றது.

தொடர்ந்து, சிலப்பதிகாரம் பல்வேறு வாழ்வியல் கூறுகளைக் கொண்டிருக்கும் இலக்கியமாகும். இயல், இசை, நாடகம், பண்பாடு என பல்வேறு கூறுகளைக் கொண்டிருக்கும் சிலப்பதிகாரத்தில், கோவலனுடைய ஊழ்வினை நகர்ச்சியும் அதன் செயல்பாடுகளும் தெளிவான முறையில் அறிந்து கொள்வது இவ்வாய்வின் சிக்கலாகக் கருதப்படுகின்றது.

ஒரு மனிதனுக்கு ஏற்படக்கூடிய குணங்கள் அவனுடைய மரபு வழியாகப், பரம்பரை வழியாகவே அவனுக்கு வரும். இதை அறிவியல் அடிப்படையிலும் விளக்க முடியும். ஒருவனது பிறப்பிற்கும் முன்பாகவே அதாவது கருவாக உருவாவதற்கும் முன்பாகவே உளநலத்திற்கான வித்துகள் ஊன்றப்பட்டு விடுகின்றன. மரபு நிலை அமைத்துத் தந்த எல்லைக்குட்பட்ட வரையிலேயே சூழ்நிலை ஒருவரிடம் எந்த ஒரு மாறுதலையும் உண்டாக்க இயலும். பரம்பரையியல் (ஜெனெட்டிக்ஸ்) நியதிகளின்படி ஒவ்வொருவருக்கும் தத்தமது உயிரியல் வரலாற்றிற்கு ஏற்ப உரிய வாய்ப்புகளையும் இழப்புகளையும் நிறைகளையும் குறைகளையும் பெற்று விளங்குகின்றனர். உடலியல்புகள் நுண்ணறிவு, திறமைகள், ஆளுமை ஆகியவற்றில் பங்கு பெறும் அளவிற்கு மரபு நிலை ஒருவரது உளநலத்தினைத் தீர்மானிக்கும் ஆற்றல் பெற்றதாக அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஒருவனுக்கு மரபு நிலை பண்புகள் அவனுடைய மரம்பரையிலிருந்து தான் தொடர்ந்து வருகின்றன. இதனை ஒருவனிடம் காணப்படும் மரபுவழிப் பண்புகளுக்கு அவனுடைய தாயும் தந்தையும் காரணமாகின்றனர். பெற்றோரிடமிருந்து ஒருவன் சில பண்புகளை மரபு வழி அடைகிறான் என்றால் அவனது மூதாதையினரது பண்புகளுக்கான அடிப்படைச் சத்துகளை அடைகிறான். இச்சத்துகளின் வழி பண்புகள் வளர்ச்சி அடைகின்றன. மரபு நிலை பண்புகளுக்கான மூலம் குரோமோசோம்களில் உள்ள ஜீன்களில் தான் இருக்கின்றன என்பதை அறிவியல் கூறுகிறது. இவற்றால் அமைக்கப்படும் உயிரணுக்களின் வடிவம், அமைப்பு ஆகியவையே பல பண்புகளைத் தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டவையாக இருக்கின்றன (ப.சுலோட்கணா,1999). மரபு வழி வரும் அறிவே மனிதனுக்கு மேலோங்கி நிற்கும். இதுவே உண்மை அறிவு எனலாம். பெற்றோர்களின் நல்வினை தீவினைகளைப் பிரித்து அறிந்து அவர்கள் கடைபிடிக்கும் அறிவின் அளவைப் பொறுத்துதான் அவர்களது சந்ததியினரின் வாழ்வு அமைகின்றது.

ஒருவன் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அந்த நூல்களிலிருந்து கிடைக்கும் அறிவை விட பெற்றோர்களின் வழியே கிடைக்கும் அறிவே மிகுந்து நிற்கும். இதனையே வள்ளுவர் “நுண்ணிய நூல்பல கற்பும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்” என்கிறார். உண்மை அறிவு எனப்படுவது ஊழ்வயத்தால் உயிருடன் ஒன்றிய இயற்கையறிவு எனலாம். அதனை மிகுவிப்பது கல்வி கேள்வியால் ஆகிய நூலறிவு. நூலறிவு முயற்சியால் வருவது. உண்மை அறிவு இயல்பாக அமைவது ஆகும். ஊழ் இடையூறாக இருக்குமாயின் கல்வியறிவு பயன்படாது. உண்மையறிவு தான் காணப்பெறும். எனினும், நல்ல ஆளுமை வளர்ச்சிக்கு மரபும் சூழ்நிலையும் காரணமாகின்றது. ஒரு மனிதன் மரபு வழியாக நல்ல அறிவையும் பெற்றிருந்தாலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அவன் வாழ்கின்ற சூழ்நிலையைப் பொறுத்தே அவனது வாழ்க்கை வளம்பெறுகிறது என்றே கூறலாம். இதனையே வழக்கில், பெற்றோர் செய்வது பிள்ளைகளுக்குப் போய்ச் சேரும் என்கிறார்கள்.

மேலும் மனித அறிவு அமைவதற்கு மரபுநிலை மட்டும் காரணமாக அமைகிறது என்று கூற இயலாது. ஒருவன் வாழும் சூழலும் காரணமாகின்றது. நல்ல சூழ்நிலையில் வாழ்கிற மனிதன் அதாவது கற்றறிந்த நல்ல குணங்களுடைய அறிஞர்கள் மத்தியில் வாழ்கிற மனிதனுடைய பழக்கவழக்கங்கள் அல்லவையாக இருக்கும். எனவே, நல்ல சூழ்நிலையில் வாழும் மனிதன் நல்லறிவு பெற்றுத் திகழ்வான். இதிலிருந்து சூழ்நிலையும் ஒரு காரணமாக அமைகின்றது. ஊழினால் பெற்ற அறிவு அதாவது மரபு வழியாக வந்த அறிவு சரியான முறையில் இல்லை எனில் நூற்பல கற்று உணர்ந்ததனால் ஏற்பட்ட அறிவுக்குப் பயனில்லை (ப.சுலோட்சணா, 1999). பல்வேறு சூழல்களில் உழன்று வரும் மனிதர்களின் வினைத் தன்மை மாறிக்கொண்டே செல்வது இவ்வாய்வின் சிக்கலாகும். திருவள்ளுவர் ஊழ்வினை ஒட்டிய பல கருத்துகளைக் கோட்பாடாக வழங்கியுள்ளார். திருக்குறளில் இருக்கும் ஊழ்க்கோட்பாடு அறியாது இருப்பது வாழ்க்கையைச் சீர்தூக்கி பார்க்கும் அமைப்பைப் புரியாமல் திண்டாட்டத்தை ஏற்படுத்த வல்லது. வாழ்க்கையயில் உள்ள ஊழ்வினையைத் திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாடு கொண்டு பொருத்திப் பார்த்துச் சீர் செய்யாமல் இருப்பது ஆய்வின் சிக்கலாகக் கருதப்படுகின்றது.

இந்நவீனக் காலக்கட்டத்தில் இளைஞர்கள் பல்வேறு ஒழுக்கச் சீர்கேட்டிற்கு உட்பட்டு அவர்களது ஒளிமயமான வாழ்க்கையை அழித்துக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் தீவினை அச்சம் இல்லாமை ஆகும். தீயச் செயல்களைச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செய்வதால் ஊழ்வினையானது தீய விளைப்பயனை அளிக்கவல்லது என்ற அறியாமையில் இருக்கின்றனர். ஊழ்வினையின் வலிமையை அறிந்து செயல்படும் ஆற்றல் குறை கண்டு இருப்பதும் இவ்வாய்வின் சிக்கலாக அமைகின்றது.

சுருங்கக்கூறின் இந்த ஆய்வு சிலப்பதிகாரத்தையும் திருக்குறளையும் புதிய நோக்கில் ஆய்வதோடு, தனி மனிதன் தனது அன்றாட வாழ்வில் ஆற்ற வேண்டிய கடமைகளையும், நல்ல செயல்களையும், நற்சிந்தனைகளையும் ஆக்ககரமான தருணத்தில் செய்ய வேண்டியதன் அவசியத்தியும் ஊழ்க்கூறுகளையும் நன்கு உணர்த்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

## 1.4 ஆய்வு நோக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இளங்கோவடிகளால் படைக்கப்பட்ட சிலப்பதிகாரம் காலத்தின் கரூவூலமாக இருக்கிறது. இக்காப்பியத்தில் பல்வேறு வாழ்வியல் சிந்தனைகளைக் காண முடிகின்றது. திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாடு சிலம்பில் கோவலனின் பாத்திரத்தின் வழியே பகுப்பாய்வதே இவ்வாய்வின் தலையாய நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

1. சிலப்பதிகாரத்தில் கோவலனின் தீவினைகளையும் நல்வினைகளையும் அடையாளங்காணுதல்.

2. சிலப்பதிகாரத்தில் கோவலனின் செயல்களுக்கான ஊழ்வினைப்பயனைத் திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாட்டினைக் கொண்டு பகுப்பாய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3. சிலப்பதிகாரத்தில் கோவலனின் ஊழ்வினை புகட்டும் படிப்பினைகளைப் பகுப்பாய்தல்.

### 1.5 ஆய்வு வினா

இவ்வாய்வானது கீழ்க்காணும் மூன்று முக்கிய வினாக்களுக்கு விடைகாணும் வகையில் ஆராயப்பட்டுள்ளது.

1. சிலப்பதிகாரத்தில் கோவலனின் தீவினைகளும் நல்வினைகளும் யாவை?
2. சிலப்பதிகாரத்தில் கோவலனின் ஊழ்வினை திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டுடன் எவ்வாறு பொருந்தி வருகின்றது?
3. சிலப்பதிகாரத்தில் கோவலனின் ஊழ்வினை புகட்டும் படிப்பினைகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.6 ஆய்வு நன்மைகள்

சிலப்பதிகாரக் காப்பிய நாயகன் கோவலன் காட்டும் ஊழ்' என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் பல தரப்பினருக்கு நன்மைகளைப் பயக்கும். இவ்வாய்வானது வினைக்கொள்கை கருத்துகளை அறிய ஒரு களமாக அமையும். ஊழ்வினையின் பொருளையும் அதன் வகைகளையும் ஆழ ஆய விரும்புவோருக்கு இவ்வாய்வு துணைபுரியும். ஊழ்வினை தோன்றுவதற்கான காரணங்களையும் அதனால் அடையும் விளைவுகளைப் பற்றியும் அறிய இவ்வாய்வு துணைபுரியும்.

அதோடு, தமிழ் இலக்கிய உலகிற்குப் பெரும் களஞ்சியமாய் விளங்கும் சிலப்பதிகாரத்தை மேலும் செயல்பாடுகள் சார்ந்து அறிய விரும்புவோருக்கு இவ்வாய்வு அருமருந்தாய் விளங்கும். இவ்வாய்வின் வழி சமணச் சமயத்தின் ஊழ்வினை கொள்கையானது திருவள்ளுவரின் ஊழ்வினை கோட்பாடுடன் பகுப்பாயபப்படுவதால், ஊழ்வினையின் பொதுத்தன்மைகளைக் கண்டறிய இயலும்.

தொடர்ந்து, பல்வேறு இலக்கியங்களை வாசிப்பதால் மனமும் சிந்தனையும் சீர்படும் என்பதனைச் சமுதாயம் அறிந்து கொள்வர். இளையச் சமுதாயம் தங்களது வாழ்நாள் கற்றலுக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் இயலும். வாசிப்பானது வெறும் வாசிப்பாக அல்லாது மனமகிழ்வாகவும் அவர்களின் வாழ்க்கை தேடலுக்கு விடை பகரும் வண்ணமாக அமையும் என்ற நம்பிக்கையை அவர்களின் மனதில் இவ்வாய்வு விதைக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேலும், புதிய தலைமுறையினர் நம் முன்னோர்களின் வாழ்வியல் கூறுகளை அறியவும் இவ்வாய்வு வித்திடும் எனலாம். சிலப்பதிகாரத்தில் உள்ள வாழ்வியல் கூறுகளைக் கண்டறியும் போது இளைய சமுதாயம் அறிந்திராத தமிழர்களின் பல்வேறு வாழ்வியல் கூறுகளையும் அறிந்துகொள்ள முடியும். சிலப்பதிகாரம் காப்பியங்களுள் முந்தையது. அன்றைய தமிழர்களின் வாழ்வியல் கூறுகளையும் தற்போதைய மாற்றங்களையும் காணும் அறிவையும் இவ்வாய்வானது வழங்கும். காலம் துரித வேகத்தில் மாறிக்கொண்டு வரும் காலக்கட்டத்தில் வரலாற்றில் இடம்பெற்ற மன்னர்களின் மாண்பினையும், பொருளீட்டத்தில் ஈடுபட்ட முறையும், துறைமுகங்களின் அம்சங்களும், அறத்தினைப் போற்றும் வழக்கங்களும், அக்கால நம்பிக்கைகளையும் அறிய இவ்வாய்வு துணைக்கோளாய் அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, இவ்வாய்வானது சமுதாயத்திற்கு அவர்கள் செயல்களில் காட்ட வேண்டிய நற்செயல்களை ஒட்டிய பயன்களை எவ்வாறு கண்டறிய இயலும் என்ற விளக்கம் பெறும் பெட்டகமாக அமையும். காலத்தோடு செய்ய வேண்டிய செயல்களை அறத்தோடு செய்வதின் அவசியமும் இவ்வாய்வின் மூலம் அறியப்படும். ஆகூழின் போது ஏற்படும் முயற்சியைக் கொண்டு தேட வேண்டிய செல்வத்தையும் அறிவையும் பெற்றுக் கொள்ளும் முக்கியத்துவமும் இவ்வாய்வில் வழி பெறப்படும் அறிவாகும்.

மேலும், அடுத்த சமுதாயத்தினரை வளர்க்கும் ஆசிரியர்களுக்கு இவ்வாய்வு மிகவும் துணைபுரியும். மாணவர்களை நற்செயல் நற்சிந்தனை, நற்மொழி என்னும் வினைகளுக்கு உரிய செயல்களைச் செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றி மாணவர்களுக்குப் போதிக்க இவ்வாய்வானது துணைபுரியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மாணவர்கள் தீய வழியில் செல்வதால் ஊழ்வினை வடிவில் உரிய காலத்தில் ஏற்படும் தீயப்பயனை அனுபவிக்கும் போது ஏற்படும் துன்பங்களை மாணவர்களுக்குப் புகட்ட இக்கருத்தியல் ஒட்டிய விளக்கம் தேவைபடும். திருக்குறளின் வழியே வள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டினை மாணவர்களுக்குத் தெளிவாக உணர்த்த இயலும்.

தொடர்ந்து, இவ்வாய்வானது மாணவச் சமுதாயத்திற்கும் மிகவும் உதவும். தீய செயல்களில் ஈடுபடாது நல்ல வழியில் அறிவைத் தேடும் பழக்கத்தை மாணவர்கள் இவ்வாய்வின் வழி வளர்த்துக் கொள்ள இயலும். திருக்குறளில் திருவள்ளுவர் கூறும் ஊழின் தன்மை வழி பகுதறிவுடனும் உரிய நேரத்தில் முயற்சிகள் செய்வதனால் உண்டாகும் விளைவினை அறிந்துகொள்ள இயலும். ஆகூழும் போகூழும் மனிதர்களின் வாழ்வை எவ்வாறு மாற்றிப் போடும் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள இவ்வாய்வு பெரிதும் துணைபுரியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மொத்தத்தில், நற்செயல்களின் கூறுகளான அன்பு, அறம், நெறி மற்றும் மகிழ்ச்சி நிலையாக அமைய செயல்களில் காட்ட வேண்டிய தீய வினை அச்சத்தையும் வினைத் தூய்மையும் ஒட்டி பின்தொடர்ந்து வரும் வினைப்பயனான ஊழ்வினை அறிவினைப் பெற்று மனிதன் மனிதாக வாழ வழிகாட்டும் திறவுகோளாக இவ்வாய்வானது அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வு எல்லை

சிலப்பதிகாரம் இந்த ஆய்வின் கருவூலமாகும். சிலப்பதிகாரக் காப்பியத்தில் கோவலன் எனும் கதாமாந்தரை மட்டும் ஆய்வுப் பொருளாகக் கொண்டு இவ்வாய்வு கையாளப்பட்டுள்ளது. உலகில் பல்வேறு கொள்கைகள் இருந்தாலும் ஊழ்வினைக் கொள்கை இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வய்வு தமிழக அரசு விருது பெற்ற உரையாசிரியர் வ.த. இராமசுப்பிரமணியத்தின் இளங்கோவடிளிகளின் சிலப்பதிகாரம் மூலமும் உரையும் என்ற நூலினைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. முதல் முதலாக இந்நூலனது 2005 ஆம் ஆண்டில் வெளியீடு கண்டு, பின்னர் 2007 ஆம் ஆண்டில் மறுபதிப்புக் கண்டுள்ளது. தொடர்ந்து, இந்நூலானது 2010 ஆம் ஆண்டு புதுப்பதிப்பைக் கண்டுள்ளது. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திற்குத் தெளிவான விளக்கம் கொண்ட நூலாக இந்நூல் அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, ஆய்வின் கோட்பாடாகத் திருவள்ளுவரின் ஊழ்க்கோட்பாட்டினை ஆய்வாளர் தெரிவு செய்துள்ளார். ஜீ. வரதராஜன் (1998) எழுதிய திருக்குறள் உரை விளக்கத்தை மட்டும் ஆய்வாளர் ஆய்வுக்குப் பயன்படுத்தியுள்ளார்.

## 1.8 ஆய்வு ஆதாரங்கள்

தமிழக அரசு விருது பெற்ற உரையாசிரியர் வ. த. இராமசுப்பிரமணியம் உரை எழுதிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் மூலமும் உரையும் என்ற நூல் இவ்வாய்வின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


முதன்மை ஆதாரமாக அமைகின்றது. மேலும், ஜி.வரதராஜன் எழுதிய திருக்குறள் உரை விளக்கம் என்ற நூல் இவ்வாய்வின் மற்றுமொரு ஆய்வு ஆதாரமாக அமைகின்றது.

இதைத்தவிர்த்து, இரண்டாம் நிலை ஆதாரங்களாக ஆய்வுக்குத் தொடர்பான அச்சுப் பிரதிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுகள், புத்தகங்கள், காப்பியங்கள், உரை நூல்கள், ஆய்வறிக்கைகள், ஆய்வேடுகள் மற்றும் இணையத் தரவுகள் யாவும் இரண்டாம் நிலை துணை ஆதாரங்களாக அமைகின்றன. அதுமட்டுமின்றி, இவ்வாய்வு நூலக ஆய்வாக இருப்பதால், பல்வேறு நூல்களும், இணையப் பதிப்புகளும் இவ்வாய்வில் மேற்கோள் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்வில் ஆய்வாளர் பயன்படுத்திய முக்கியக் கலைச்சொற்களின் விளக்கமும் தெளிவுரையும் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

### 1.9.1 சிலப்பதிகாரம்

ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரக் காப்பியமும் ஒன்றாகும். சிலப்பதிகாரம் என்ற காப்பியம் சிலம்பு, அதிகாரம் என்ற இரு சொல்லின் புணர்ச்சியால் உருவகப்பெற்றது. (சீனிதுரைச்சாமி, 2013) சிலப்பதிகாரக் காப்பியக் கதை சிலம்பை முன்னிருத்தி விளைந்த கதை என்பதனால் சிலப்பதிகாரம் என்றானது. இயல், இசை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நாடகம் என்று முத்தமிழையும் குறிப்பதாகவும் இக்காப்பியம் அமைகின்றது. (இராமசுப்பிரமணியம், 2009). சிலப்பதிகாரக் காப்பியம் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இளங்கோவடியால் எழுதப்பட்டது. சிலப்பதிகாரக் காப்பியத்தை இளங்கோ எந்தவொரு சமயத்தையும் சான்று படைக்காமல் பல சமயங்களை இதனுள் இணைத்துள்ளார் (மறைமலையடிகள், 2008). பழங்குடி மக்களின் வாழ்வு எவ்வகையாக அமையப்பெற்றது என்பதற்கு இக்காப்பியம் ஒரு முன்னோடியாக அமைகின்றது. (ஆனந்தன், 2013). இக்காப்பியமானது மூன்று காண்டங்களாக இயற்றப்படுள்ளன.

### 1.9.1.1 புகார்க் காண்டம்

சோழவள நாட்டில் காவிரி ஆறு கடலிற் கலக்கும் சங்கமமாக விளங்குவது காவிரிபூம்பட்டினம். பெருங்குடியர் என்னும் குலத்தில் சிறந்து விளங்கிய மாசாத்துவான் மகன் கோவலன். அந்நகரில் பெரும் வணிகனாகத் திகழ்ந்த மாநாய்கனின் மகள் கண்ணகி ஆவாள். கோவலன் கண்ணகிபால் கனிவும் அன்பும் கொண்டு சிறப்புடன் வாழ்க்கை நடத்தி வந்தான். இந்நிலையில் இருவரும் தனியே இல்லறம் நடத்தி விருந்தோம்பல் முதலிய அறங்களைப் புரியும் வகையில் அவர்களுக்குத் தனி மாளிகை அமைத்து, பெற்றோர்கள் நலம் சேர்த்தனர். அதற்குரிய பெருஞ்செல்வத்தையும் வழங்கினர். கோவலனும் கண்ணகியும் மனம் ஒத்து இல்லற வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒரு நாள், ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கிய மாதவி அரசவையில் நிகழ்த்திய நாட்டியத்தின் பயனாக ஆயிரெத்தெட்டுக் கழஞ்சு பொன்மணிமாலையை வாங்கி மாதவியிடம் அளித்து அவளொடு இனிது வாழ்ந்தான். கோவலன் கடற்கரையில் யாழ் மீட்டி பலவகை வரிப்பாடல்களைப் பாடினான். மாதவி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கோவலன் வேறு மகளிர் பால் விருப்பம் உடையவன் போலும் என்று எண்ணினாள். பின்பு கோவலனிடமிருந்து வீணையை வாங்கித் தானும் வேறு குறிப்புள்ளவள் போல் தோன்றுமாறு யாழ் மீட்டிக் காட்டினாள்.

அதனைக் கண்ட கோவலன், மாதவி வேறு ஓர் ஆடவன் மீது விருப்பம் கொண்டுள்ளதாக எண்ணி மனம் வேறுபட்டு வெறுப்புற்றவனாகித் தனது இல்லத்தை நோக்கிக் கண்ணகியை அடைந்தான். கோவலன் கண்ணகியை நோக்கி தான் பொய்யை மெய்யாகக் கருதி முன்னோர் தேடிவைத்த செல்வத்தை அழித்ததை எண்ணி வருந்தினான். கண்ணகி தன்னிடம் உள்ள இரண்டு சிலம்புகளில் ஒன்றனைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டினாள். விடிவதற்குள் காவிரிபூம்பட்டினத்திலிருந்து கவுந்தியடிகளின் துணையுடன் மதுரைக்குப் புறப்பட்டான்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.1.2 மதுரைக் காண்டம்

உறையூரில் மூவரும் தங்கியிருந்து மறுநாள் மதுரையை நோக்கிச் செல்லலானார்கள். ஆங்கு வழியில் கண்ணகி மற்றும் கவுந்தியடிகளை ஓரிடத்தில் தனியே இருக்கச் செய்துவிட்டுக், கோவலன் தனியே செல்லும்போது அங்கிருந்த பொய்கைக் கரையில் மாதவியால் அனுப்பப்பட்ட கௌசிகன் என்னும் அந்தணன் ஒருவனைக் கண்டனன். அவன் வாயிலாகத் தன் பெற்றோரும் மாதவியும் தன்னுடைய பிரிவை எண்ணி வருந்தும் நிலையைக் கோவலன் அறிந்தான். பின்பு மாதவி அளித்த கடிதத்தைக் கௌசிகன் தர அதனை வாங்கிப் படித்து மாதவி குற்றம் அற்றவள் என்று உணர்ந்தான். பின்னர், அவ்வோலைச் சுருளைத் தான் கொடுத்ததாகத் தன்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பெற்றோரிடம் தருமாறு கௌசிகனிடம் கூறலானான். அவ்வோலையின் வாசகம் தந்தைக்கும் பொருத்தமானதாக அமைந்திருந்தது. கௌசிக அந்தணனை அனுப்பிய பின்பு கண்ணகியை அடைந்து கோவலன் கவுந்தியடிகளுடனே பாணர்களோடு கூடி மகிழ்ந்து வழி கேட்டு மதுரை நகரை அடைந்தான்.

பின்னர்க் கோவலன் கண்ணகியைக் கவுந்தியடிகளிடம் ஒப்படைத்துப் பாதுகாக்குமாறு கூறி மதுரை நகரின் உள்ளே தான் வாணிகம் செய்வதற்குரிய இடத்தினை அறிந்து வருவதாகச் சொல்லிச் சென்றான். மதுரை நகருள் சென்று திரும்பிய கோவலன் கவுந்தியடிகளைச் சார்ந்து அதன் சிறப்பினைக் கூறலானான். அப்போது மாடலன் என்னும் அந்தணன் கோவலனைக் கண்டு மாதவி பெண் குழந்தையைப் பெற்று மணிமேகலை என்னும் குல தெய்வத்தின் பெயரைச் சூட்டியதும் மற்றும் அவன் செய்த பல அறச்செயல்களையும் சாற்றிப் பாராட்டினான்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பின்பு கவுந்தியடிகள் மாதரி என்னும் ஆயர்க்குல நல்மாதர் பால் கண்ணகியை அடைக்கலமாக ஒப்படைத்து அங்கிருந்து புறப்பட்டார். மாதரி தன் மகள் ஐயை என்பவளைக் கண்ணகிக்குத் தோழியாக்கித் தன்னுடைய மனைக்கு இருவரையும் அழைத்துச் சென்றாள். ஐயையின் துணையுடன் கோவலனைப் பூசித்து நன்கு அமுது சமைத்துக், கண்ணகி உணவு பறிமாறினாள். கோவலன், கண்ணகியின் அன்பினை எண்ணி மகிழ்ந்தவனாயினும் தான் அவளுக்குத் துன்பத்தை இழைத்ததனை எண்ணி வருந்தியவனாய் ஆறுதல் மொழிந்து அவளது ஒரு காற்சிலம்பை எடுத்துச் சென்று உரிய இடத்தில் விற்பனை செய்து அதன் வருவாயைக் கொண்டு வாணிபத்தை மீண்டும் தொடங்குவதற்கு முற்படலானான். கோவலன் வீதியில் செல்லும்போது பெரிய திமிலுடைய எருது ஒன்று பாய்ந்து எதிரே வந்தது. அந்தத் தீய சகுனத்தைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பொருட்படுத்தாது, மதுரை நகரை அடைந்தான். அரச வீதியிற் சென்ற கோவலன் பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு தன்னிடம் உள்ள சிலம்பினைக் காட்ட அவன் தான் அரசனிடம் இச்சிலம்பைக் காட்டிவரும் வரையில் அங்கேயே இருக்குமாறு கூறினான். அப்பொற்கொல்லன், அரசன் மனைவியின் காற்சிலம்பு ஒன்றினை வஞ்சித்துக் கவர்ந்தவன். அந்நிலையில் அத்தகைய குற்றம் வெளிப்படும் முன்னதாக இச்சிலம்பினைக் காட்டி கோவலனே அதனைக் கவர்ந்த கள்வன் எனக் குற்றப்படுத்திப் பழி கூறினான். அத்தருணத்தில் அரசன் தன் மனைவியின்பால் ஊடலில் ஆழ்ந்ததன் காரணமாக விதியின் வயப்பட்டவனாகி “அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டு வருக”, என உரைத்தான்.

இவன் கள்வன் அல்லன் என்று சிலர் உரைத்த நிலையிலும் கொலை அஞ்சாத ஒருவன் அவனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான். கோவலனைக் கள்வன் என்று குற்றம் சுமத்தி கொலை செய்த செய்தியானது ஆயர் சேரியை அடைய ஆங்குப் பல வகையான தீய நிமித்தங்கள் தோன்றின.

அப்போது மதுரை நகரிலிருந்து வந்த ஒருத்தியின் வாயிலாகக் கோவலன் கொல்லப்பட்டதை அறிந்த கண்ணகி மூர்ச்சித்து விழுந்தாள். கண்ணகி வீதி வழியே புலம்பியவாறு மாதர்களை நோக்கியும் சான்றோர்களை நோக்கியும் தெய்வங்களை நோக்கியும் “என் கணவன் கள்வனோ” என்று முறையிட்டவாறு அழுது அரற்றிய நிலையில் “என் கணவனை முன்பு போல் கண்டு நல்லுரை கேட்பேன்” என்றாள். கோவலன் வெட்டப்பட்டுள்ள இடத்தை அடைந்த கண்ணகி அவனை மார்புறத் தழுவிக்கொள்ள அவன் உயிர்பெற்று எழுந்தான். அவன் தன் கையால் அவள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கண்ணீரைத் துடைக்க அவள் அவன் பாதங்களைப் பணிந்தாள். உடனே கோவலன் "நீ இங்கு இருக்க" என்று சொல்லிய அளவில் அவன் உயிர் பிரிந்து சென்றது.

பாண்டியன் மனைவியான கோப்பெருந்தேவி தான் தீக்கனவு கண்டதை மன்னனுக்கு உரைத்துக் கொண்டிருந்தபோது, கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைக்கச் சென்றாள். கண்ணகி தன் காற்சிலம்பில் மாணிக்கப்பரல்கள் உள்ளன என்று கூறினாள். மன்னன் தன்னுடைய சிலம்பு முத்துப்பரல்கள் உடையதெனக் கூறித் தான் கோவலனிமிருந்து கவர்ந்த சிலம்பினைக் கொண்டு வருமாறு செய்து முன்னே வைத்தான். கண்ணகி அச்சிலம்பினைத் தரையில் விசி எறிய அது உடைந்து அதில் இருந்த மாணிக்கப் பரல்கள் சிதறித் தெறித்தன.

மாணிக்கப் பரல்கள் தெறிக்க பாண்டிய மன்னன் "யானோ அரசன்? யானே கள்வன்! அந்தோ! பெருமைக்குரிய பாண்டியர் குலமானது என்னால் பழிக்கப்பட்டதே! என் ஆயுள் கெடுக!" என்று மயங்கி வீழ, அவன் உயிர் அவனை விட்டு நீங்கியது. மன்னனின் பிரிவுடனே, கோப்பெருந்தேவியும் உயிர் துறந்தாள். "நான் பத்தினியாய் இருத்தல் உண்மையாயின் இவ்வூரை அழிப்பேன்!" என்றாள். தன் இடப்பக்க மார்பகத்தைத் திருகி எறிந்தாள். அக்கினி தேவன் அந்தணன் வடிவம் கொண்டு "பத்தினியே! உனக்குத் துன்பம் செய்த நாளில் இவ்வூரை எரித்து விடும்படி எனக்கு ஏவல் உள்ளது, யாரை அழிக்க வேண்டும்; ஆணையிடுக!" என்றான். கண்ணகி, "அந்தணர், அறவோர், பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழந்தைகள், பசுக்கள் இத்தன்மையினரை விடுத்துத் தீத்திறத்தோர் பக்கமே சேர்க!" என்றாள். உடனே, கண்ணகியின் ஆணைப்படி நகரமானது எரியத் தொடங்கியது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அந்நிலையில் மதுரை நகரின் அதிதேவதையாகிய மதுராபதித் தெய்வமானது தோன்றி கண்ணகியை நோக்கி பரதன் இப்பிறவியில் கோவலனாய் பிறந்து வினையை அனுபவித்ததாகவும், இன்றிலிருந்து பதினான்கு நாட்கள் நீ உன் கணவனோடு சேர்வாயாக" என்று அத்தெய்வம் கண்ணகிக்கு ஆறுதல் கூறியது. கண்ணகி வைகைக்கரை வழியே மேற்கு நோக்கிச் சென்று மலை நாட்டை அடைந்து அங்குள்ள மலை மீது ஏறி வேங்கை மரத்து நிழலில் நின்று, பதினான்காம் நாள் தெய்வ வடிவத்தோடு வந்த கோவலனைக் கண்டு மகிழ்ந்து அவனோடு தேவர்கள் ஏத்துமாறு சுவர்க்கம் சென்றாள்.

**1.9.1.3 வஞ்சிக் காண்டம்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கண்ணகி தன் கணவனோடு விமானத்தில் ஏறிச் சுவர்க்கத்தை நோக்கிச் செல்லக் கண்ட வேடுவர்கள், வியப்பில் ஆழ்ந்தவர்களாய்க் குரவைக் கூத்து நடத்தினார்கள். ஆங்குச் சேர மன்னனாகிய செங்குட்டுவன் மலைவளங் காணுமாறு வரக்கண்ட வேடுவர்கள் பல வகையான காணிக்கைப் பொருள்களை அளித்து மன்னனை மகிழ்வித்தார்கள். பின்பு அவர்கள் தாம் கண்ட தெய்வக் காட்சியை மன்னனிடம் தெரிவித்தார்கள். சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளுடனும் தம்பி இளங்கோவடிகளுடனும் இருந்தார். அப்போது அங்கிருந்த மதுரைத் தமிழாசிரியரான சாத்தனார் என்னும் புலவர் கண்ணகிக்கு உற்ற துன்பத்தையும் தீவினைக் காரணமாக அவள் கணவனாகிய கோவலன் சிலம்பின் காரணமாகக் கொலையுண்டதையும் கண்ணகி அரசன் முன் சென்று வழக்கு உரைத்ததையும், சிலம்பை எறிந்து தன் கணவன் கள்வன் அல்லன் என்று சாற்றியதையும், பாண்டிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மன்னன் உயிர் துறந்ததையும் அவன் மனைவி உடன் உயிர் நீத்ததையும் கண்ணகி மதுரையை எரித்ததையும் உரைத்தார்.

செங்குட்டுவன் பாண்டிய மன்னன் இறந்ததை எண்ணி வருந்தியவாராய் தன் தேவியை நோக்கிப் பாண்டியன் உயிர் துறந்த வருத்தம் தாங்காது தன்னுயிரை விடுத்த பாண்டியன் தேவியும் மற்றும் துன்பத்தோடு இங்கு வந்த கண்ணகியும் ஆகிய இவர்களில் கற்பின் நன்னலத்தோர் யாவர்? எனக் கூறுமாறு கேட்டார். அதற்கு வேண்மாள் மன்னனை நோக்கித் தமது நாட்டுக்குத் தெய்வத்தன்மையோடு வந்த கண்ணகிக்குச் சிலை வைத்து வழிபடுதல் வேண்டும் என்றாள்.

சேர மன்னன் தமிழ்நாட்டரசர்களை இகழ்ந்து பேசிய கனகன், விசயன் என்னும் அரசர்களை வெற்றிக் கொள்ளும் வகையில் பெரும் படையோடு வடக்குச் சென்றார். கனகன், விசயன் ஆகியவர்களையும் அவனுக்குத் துணை சேர்ந்த உத்திரன் என்பவனையும் வெற்றி கொண்டார். இமய மலையிலிருந்து கனக விசயன் தலையில் சிலைக்கல்லைச் சுமந்து வரச்செய்து, கங்கையில் நீர்ப்படை செய்து கோயில் எழுப்பினார்.

பின்னர் மாடலன் என்னும் அந்தணனுக்கு வேண்டிய பொன்னைக் கொடுத்த சேர மன்னன், தன்னுடைய நகரை அடைந்தார். கண்ணகியின் தோழியாகிய தேவந்தியும் ஐயை என்பவளும் சேரன் செங்குட்டுவனைக் கண்டு தமது துன்பத்தைப் பகிர, கண்ணகி தெய்வ வடிவத்தோடு வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தாள்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கயவாகு என்னும் இலங்கை மன்னனும் மாளவ, ஆரிய மன்னர்களும் தமது நாடுகளில் கண்ணகிக்குக் கோயில் எழுப்பினார்கள். மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவர் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு வேள்வி முதலான சாந்திகளைச் செய்து தம்முடைய நாட்டில் ஏற்பட்ட வறுமை, நோய் முதலானவற்றை நீக்கினார். சோழ மன்னனாகிய பெருநற்கிள்ளியும் கண்ணகிக்குக் கோயில் எழுப்பி நித்திய பூசை விழா முதலியவற்றை நிகழ்த்தி நாட்டின் வளமானது பெருகுமாறு செய்தார்.

### 1.9.2 கோவலன்

கோவலன் பெரும் வணிகன். சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவன் ஆவான். காவிரிப்பூம்பட்டணத்தில் வாழ்ந்து வந்த புகழ்பெற்ற மாசாத்துவான் எனும் வணிகனின் மகன் ஆவான். கோவலன் மாநாய்கன் என்ற வணிகனின் மகளான கண்ணகியை மணந்து கொண்டான். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். சில காலத்துக்குப் பின் கோவலனுக்கு மாதவி எனும் நாட்டியக்காரியுடன் பழக்கம் ஏற்பட கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் வாழத் தொடங்கினான். அவன் செல்வம் அனைத்தும் கரைந்து போனது. ஒரு நாள் மாதவியுடன் கருத்துவேறுபாடு ஏற்படவே மனம் திருந்தி கண்ணகியிடம் வந்தான். கண்ணகியிடம் ஓரிணைச் சிலம்புகளைத் தவிர வேறெதுவும் இல்லை. எனவே, கோவலன் அவற்றை விற்று வணிகம் செய்து வாழலாம் என தனது மனைவியுடன் வைகறையிலேயே மதுரை நோக்கிப் பயணமானான். மதுரை வீதியில் பொற்கொல்லனிடம் சிலம்பின் விற்பனைக்காகச் செல்லுகையில் பொற்கொல்லனால் அரசியின் காற்சிலம்பைத் திருடிய கள்வன் எனங் குற்றச்சாட்டப்பட்டான். மதுரையின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மன்னனான பாண்டிய நெடுஞ்செழியன் பொற்கொல்லனின் பொய்சாட்சியத்தால் கோவலனைக் கொல்லுமாறு ஆணையிட கோவலன் கொல்லப்பட்டான். இதையறிந்த கண்ணகி அரசவைக்கு வந்து தனது சிலம்பை உடைத்து, தனது சிலம்பில் உள்ள பரல்களும் அரசியின் காற்சிலம்பில் உள்ள பரல்களும்  வெவ்வேறு என்பதைச் சுட்டிக் காட்டி மன்னன் தவறு செய்ததை உணர்த்தினாள். தாம் தவறாகத் தீர்ப்பு அளித்ததை உணர்ந்து வேதனையடைந்த பாண்டிய மன்னன் அவ்விடத்திலேயே உயிர் துறந்தான். கோவலன் தேவ கதி அடைந்தான்.

### 1.9.3 திருக்குறள்

திரு என்றால் சிறப்பு என்று பொருள்படும். குறள் என்பது குறள் வெண்பாவைக் குறிக்கின்றது. உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, முப்பால், உத்திரெதம், தெய்வ நூல் என பல பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகின்றது. இதனை இயற்றியவர் கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.மு ஒன்றாம் நூற்றாண்டிற்கும் இடையில் வாழ்ந்தவராக இன்றைய ஆய்வாளர்களால் கருதப்படும் திருவள்ளுவர் ஆவார். திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினென்கீழ்க்கணக்கு எனப்படும் திரட்டில் இருக்கின்றது. இஃது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். திருக்குறளில் உள்ள பாக்கள் குறள் வெண்பா வகையைச் சார்ந்தவை. அறம், பொருள், இன்பம் என மொத்தம் மூன்று பால்களாகத் தொகுக்கப்பட்டு 133 அதிகாரங்கள் வீதம் 1330 குறள்களாக அமைக்கப்பெற்று விளங்குகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.4 ஊழ்வினை

வினை என்பது ஒரு செயல், தொழில் என்ற பொருளைக் குறிக்கின்றது. இதனை நல்வினை தீவினை என்று இருவகைப்படுத்தலாம். வினைப்பயன் என்பதற்குச் செயலின் விளைவு, தொழிலின் பயன் என்று பொருள் காணலாம். இதனையும் நல்வினைப்பயன், தீவினைப்பயன் அல்லது நற்பயன், தீப்பயன் என்று இருவகைப்படுத்தலாம். ஒருவன் செய்யும் செயல் நல்ல செயலாக இருந்தால் அதன் பயனாய் நன்மையும், தீயச் செயலைச் செய்தால் அதன் பயனாய் தீமையும் விளையும். இந்த வினை விளையும் காலம் அதவாது பயன் அளிக்கும் காலம் மனிதனுடைய நிகழ்க்காலத்திலோ, மறுபிறவியிலோ நிகழும். இக்கருத்தைப் பெரும்பாலான சமயங்கள் ஏற்றுக் கொள்கின்றன. இந்த நிகழ்வின் சுழற்சியைக் 'கர்மா' என வடமொழியாளர்களால் வழங்கப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் ஊழ்வினை என்று கூறுகின்றன.

வினைப்பயனை ஊழ்வினை, விதி பால், கர்மா, கம்மா என பலவாராகப் பெயரிட்டு நம்புகின்றனர். ஊழ்வினை என்ற சொல் வினைத்தொகையாகும். இச்சொல் ஊழ்த்த வினை, ஊழ்கின்ற வினை, ஊழும் வினை என முக்காலத்திற்கும் ஏற்ற வகையில் பொருள் காணலாம்.

**ஊழ் + வினை = ஊழ்வினை**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஊழ் என்ற பகுதிச் சொல்லிற்கு முதிர்வு என்ற பொருளை அகராதிகள் கூறுகின்றன. வினை என்பது செய்யும் செயலைக் குறிக்கின்றது. எனவே, ஊழ்வினை என்ற சொல்லிற்கு வினை முதிர்வு என்ற பொருள் கிடைக்கப்பெறுகின்றது. வினையானது அது முதிர்கின்ற காலம் வரை ஒருவனுடன் இருந்து முதிர்ந்தவுடன் அதன் பயனைக் கொடுக்கும். ஊழ் என்ற சொல்லிற்குப் பழைமை, பழவினைப்பயன், முறைமை, தடவை, முதிர்வு, முடிவு, பகை, மலர்ச்சி, என்று பொருள் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினைகளின் பலனை இப்பிறப்பிலேயே அனுபவித்துத்தான் தீர வேண்டும். "'ஊழ் என்றால் வரிசை, தொடர்ச்சி என்றும் பொருள் கொள்ளலாம். ஒருவர் செய்யும் எந்தவொரு செயலும் அதாவது வினையும் அப்படியே முடிவு பெறாது; தொடர்ந்து வரும். இதிலிருந்து 'கர்மா' என்ற கோட்பாடு வெளிநாட்டவரிடமும் காணப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ஊழ்வினை என்பது கர்மபலன். ஊழ்வினை என்பது முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினையைக் குறிக்கின்றது. வினைத் தொடர்ச்சி என்னும் இயற்கை நியதியை வெல்லும் ஆற்றல் எவருக்கும் இல்லை.

வாழ்க்கைச் சூழ்நிலையை ஆராயும் போது, பொதுவாகத் துன்பமான வாழ்க்கை, சுகமான வாழ்க்கை, ஆயுள் இதெல்லாம் ஊழ்வினையைப் பொறுத்தது என்பது சமயங்களில் நம்பப்படுகின்றது (ப.சுலோட்சனா, 1999). 'விதியின் பிழை நீ இதற்கு என் கொல் வெகுண்டது' என்று இராமன் இலக்குவனுக்கு எடுத்துரைப்பதாகக் கம்பன் சொல்வது ஊழ்வினையைத் தான். தமிழ்ச் சங்கப் பாடல், கம்பராமாயணம், நளவெண்பா உள்ளிட்ட பல்வேறு இலக்கியங்களும் மனித வாழ்வில் விதி இயங்குவதை ஏற்கின்றன. ஒருவன் முற்பிறவியில் செய்த வினையின் அடிப்படையிலேயே அவனது அடுத்த பிறவியின் செயல்பாடுகள் அமையும் என்பதை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அவை விளக்குகின்றன. ஒருவன் நிகழ்கால வாழ்வின் முற்பகுதியில் செய்த வினையின் பயனை அதே வாழ்வின் பிற்பகுதியில் பெறுவான் என்ற கருத்து ஊழ்வினையாகக் கருதப்படுகின்றது.

## 1.10 தொகுப்புரை

சுருங்கக்கூறின், இந்த இயலில் ஆய்வின் தலைப்பு ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வின் நன்மைகள், ஆய்வு எல்லை மற்றும் கலைச்சொற்கள் விளக்கம் போன்ற விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாய்வு சிலப்பதிகார நாயகன் கோவலனின் ஊழ்வினையைத் திருவள்ளுவரின் ஊழ் கோட்பாட்டைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. மேலும், ஆய்வின் மூன்று முக்கிய நோக்கங்கள் இவ்வாய்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi